11707

உ

கடவுள் துணை.

# எக்காலக்கண்ணி.

MAHAMAHOPADHYAYA DR. U.V. SWAMINATHA IYER LIBRARY, TIRUVANMIYUR, MADRAS-41

இஃது

சித்திமுத்திக்குரிய வாய்மைகளடங்கிய

"உண்மைப்பொருள்விளக்க"

நூலாசிரியராகிய

செங்கற்பட்டு

நாராயணசாமி முதலியாரவர்களால்,

இயற்றப்பட்டது.

---

# ECCALAKKANNI

PUBLISHED BY

C. NARAYANASAWMY MUDALIAR,

AUTHOR OF

"OONMAIPPORULVILAKKAM."

---

MADRAS:

PRINTED BY AMPTHILL & CO., TRIPLICANE.

1906.

---

இதின் விலை அணா 1.

[illegible]ன் துணை.

## சாற்றுகவி.

வாரார்ந்த கொங்கை மடமயிலே மாதவத்து
நாராயணசாமி நாவலவன் - சீராக
இக்காலத் துள்ளார் எளிதுணரச் சொற்றனனோர்
எக்காலக்கண்ணி யினிது.

12-10-06.

கா. சி. சிவசங்கரனார்,
திருவேட்டீச்சரம்.

---

## நூன்முகம்.

நாராயணசாமி நண்புடனே கூறினனால்
ஏராளமான எக்காலக்கண்ணியிதே
தொண்டமண்டலந் துளுவவேளாளன்
வண்டமிழ்ச் செங்கற்பட்டினி லுதித்தோன்.
முன்னரியற்றினனுண்மைப் பொருளெனப்
பின்னரிந்நூலைப்பிரிய மோடீந்தனன்
வேண்டுமெனத்து மவ்வுண்மைப் பொருளிலே
காண்டற்கெளிதாங் கருத்துடையார்க்கே.
இந்நூல் விரிவையம் முதனூல்தனிலே
நன்னயமாகக் கண்டிடலாமே
எப்பிழையேனு மிந்நூலிலிருந்தால்
அப்பிழைபொறுத்த லறிஞர்க்கழகே.

### வேறு.

எக்காலக்கண்ணியதை யின்பமுடன் கொள்ளுபவ
ரெக்காலமழியாத பேரின்ப மெய்துவரே.

### கணபதிவணக்கம்.

ஐங்கரத்தோன் யானைமுகன் அங்குசத்தா னவனிரண்டு
பங்கயமாமலரடியைப் பணிந்து நிதம்போற்றிடுவாம்
பிரணவசொரூபப் பெரும்பொருளான
அரன் அரி அயனெனு மனைவரும்வாழ்க
வேண்டியபொருளை விளக்கியருளத்
தாண்டவம்புரியுந் தற்பரன்வாழ்க.

### குரு.

பிரணவமந்திரப் பெரும்பொருளுரைத்த
சரவணபவனெனுஞ் சற்குருவாழ்க
சிந்தையிலையந் தெளிந்திடவமர்ந்த
தந்திரகுருவின் றாளிணைவாழ்க.

---

உண்மைப்பொருளென்பதனை "உண்மைப்பொருள் விளக்க"மெனக்கொள்க.

## வேறு.

சற்குருவைத்தேடு மத்தேட்டமேதிருவுருவா
யற்புதமாயுட் புறம்பாயானன் றனடிவாழ்க
பக்குவர்க்கு ஞானம் பாலிக்குஞ்சிந்தையுடன்
தக்கபடிவந்தருளுஞ் சற்குருவின்றருள்வாழ்க
வல்லோர்களல்லவர்க்கு வாக்களிக்கப் பூரணனாய்க்
கல்லாலின்கீழமர்ந்த கண்ணுதலான்றருள்வாழ்க.

## தெய்வ வணக்கம்.

சிருட்டிதிதிசங்காரத் தேவரெலாம் வாழ்ந்திடுக
திருவாணி பரையாதி சத்தியெலாம்வாழ்ந்திடுக.

## வேறு.

சந்திரசூரிய சகலரும்வாழ்க
அந்தணர்பெரியோ ரனைவரும்வாழ்க
முத்தியடைந்தவ ரனைவரும்வாழ்க
சித்தியடைந்தவ ரனைவரும்வாழ்க
சதுர்மறையாகம சாத்திரம்வாழ்க
விரிசமயங்களினுண்மையும்வாழ்க

## பொருள்வணக்கம்.

அங்கிங்கெனாதபடி ஆனந்தமயமாகி
யெங்குமாய்நின்றபொரு ளொன்றதனையேத்துவாம்

ஆதியுநடுவுமின்றி அந்தமுமின்றிநின்ற
சோதியையெங்குமானச் சுடரினைப்போற்றிசெய்வாம்

நித்தியமாய் நிர்மலமாய் நிராமயமாய் நிர்க்குணமாய்
சித்துருவாய் நின்றதனைச் சிந்தையிலே கொண்டிடுவாம்

சத்துசித்தானந்தம் சச்சிதானந்தமதாம்
சுத்தபிரமப்பொருளைச் சுகமுடனே சிந்திப்பாம்

சுத்தசைதன்னியமே நித்திய ப்பிரமமெனும்
வத்துவையென்றுமே சித்தத்தழுத்துவாம்

ஆரணமுமாகமமு மன்றுரைத்த மெய்ப்பொருளை
காரணகர்த்தாவெனவே கண்டினிதுபோற்றிடுவாம்

சமயங்களத்தனைக்குந் தக்கவடிவுடையதொரு
சமயாதீதப்பொருளைச் சந்ததமுஞ்சிந்தைசெய்வாம்

குணத்தானும் பெயரானும் ஓர்பொருளேபலவாகும்
நிர்க்குணமாமப்பொருளைச் சிந்தையினிற் கொண்டிடுவாம்.

கடவுள் துணை.

# எக்காலக்கண்ணி.

செக்முதித்தவகையெல்லாந் திருவருளின்செயலென்றே
அகந்தெளிந்து மெஞ்ஞான மனுபவிப்பதெக்காலம் ௧

பொய்யென்ற வுலகமதைப் பொய்யாகவேகண்டு
மெய்யென்ற ஞானமனமேவுவது மெக்காலம் ௨

வேதாந்த சித்தாந்த அத்துவிதமார்க்கத்தை
நீதமுடன் மனமறிய நேர்வதுதானெக்காலம் ௩

சமயக்கோட்பா டுண்மை களனைத்தும்
சமமுடனே மனமறியச் சார்வதுதானெக்காலம் ௪

அது நீ யெனல்வேதாந்தம் நீ அதுவெனல் சித்தாந்தம்
மதியுடனே யிருவகையு மனமறிவதெக்காலம் ௫

இரண்டறக்கலத்தலெனு மத்வைதவுண்மைதனின்
திரண்ட சாம்பிராச்சியத்தைச் சேர்வதுதானெக்காலம் ௬

பதிபசுபாசமெனுஞ் சித்தாந்தக்கொள்கைதனை
விதியுடனேமனமறிய மேவுவதுமெக்காலம் ௭

சித்தசித்தீஸ்வர வைணவக்கொள்கைதனை
புத்தியுடன்மனமறியப் புகுவதுதானெக்காலம் ௮

அங்கலிங்கசையோக வீரசைவக்கொள்கைதனை
சங்கையறமனமறியச் சார்வதுதானெக்காலம் ௯

சத்திசிவபூசையெனுஞ் சித்தாதிமார்க்கத்தை
சித்தியுடன் மனமறிந்துத் தேர்வதினியெக்காலம் ௰

மற்றசமயக்கோட் பாடனைத்தையும்
வித்தகமாய் மனமறிய மேவுவதுமெக்காலம் ௧௧

செகசீவபரமென்னும் வேதாந்த உண்மைதனை
சுகமுடனே மனமறியத் துணிவதினி யெக்காலம் ௧௨

சீவபரவைக்கியமெனு மத்துவிதமார்க்கத்தை
ஆவலுடன் மனமறிய அன்புகொள்வதெக்காலம் ௧௩

பக்தியோகமார்க்கமெலாம் பதமுக்திக்கிடமென்ற
முத்தருரைகண்டுமன முறுதிகொள்வதெக்காலம் ௧௪

கன்மவனுட்டிப்பெல்லாஞ் சென்மத்துக்கிடமென்ற
முன்னோருரையைமன முறையறிவதெக்காலம் ௧௫

சரியைகிரியாயோகம் சன்மார்க்கத்தங்கமெனும்
பெரியோருரையைமனம் பேணுவதுமெக்காலம் ௧௬

முத்திக்குஞானமே மூலமெனக்கூறுமறை
சித்தத்திலேகொண்டு தெளிவடைவதெக்காலம் ௧௭

யோகவகையத்தனையும் பாவனையே யென்றுணர்ந்து
மோகமறநின்றுமன முறையறிவதெக்காலம் ௧௮

மந்திரசெப தபங்களெலாம் மனமடங்குதற்கென்றே
தந்திரமாய்மனமறியச் சார்வதினியெக்காலம் ௧௯

அலைகின்ற மனமதனை யடக்குதற்குச் சாதனமாய்ப்
பலகலையு மனமுணரப் பற்றுவதுமெக்காலம் ௨௰

ஆருதாரத்தமர்ந்த ஆறு பெருமூர்த்தியையும்
சீராகக்கண்டுமனந் தெரிசிப்பதெக்காலம் ௨௧

சரியை கிரியாயோக சாதனையை மானதமாய்
புரியமனங்கண்டுகொண்டு பூரிப்பதெக்காலம் ௨௨

தத்துவங்களத்தனையுந் தன்னையறிதற்கென்றே
சத்தியமாய் மனமறியச் சார்வதினியெக்காலம் ௨௩

முத்திவகையத்தனையும் உண்மைப்பொருளிலே
வித்தாரமாயறிய விரும்புவதுமெக்காலம் ௨௪

நானென்னுமாங்கார மற்றதேமுத்தியெனு
ஞானிகளுரையை மன நண்ணுவதுமெக்காலம் ௨௫

ஆனந்தாதீதத்தே முத்தியெலாஞ் சமமென்னு
மோனமொழியை மனமுறையறிவதெக்காலம் ௨௬

பசுவென்னுஞ்சப்தமே அஞ்ஞானமென்றதனை
விசுவாசமாயறிய விரும்புவதுமெக்காலம் ௨௭

பதிகர்த்தா பசுசீவன் பாசமுடலென்பதனை
மதியுடனேயறிந்து மனமகிழ்வதினியெக்காலம் ௨௮

பாசபசுபதி யியல்புதனை தானறிந்து
ஆசையுடன் தன்னிலையிலிருப்பதுதானெக்காலம் ௨௯

பிரமத்திற்கற்பிதமாய் சீவேஸ்வரசெகத்து
உற்பத்தியானவகை மனமறிவதெக்காலம் ௩௰

சைதன்னியமொன்றே நான்குசித்தானதெனும்
மெய்ம்மைதனையறிய மனமிச்சிப்பதெக்காலம் ௩௧

ஈசன்சீவன் வாச்சியம் பிரமகூடத்தனிலக்கியம்
நேசமுடனிரண்டினுரை மனமறிவதெக்காலம் ௩௨

அத்தியாரோப அபவாதவிலக்கணங்க
ளித்தன்மையுடைய தெனமனமறிவதெக்காலம் ௩௩

ஆரோபஅத்தியாசங்கற்பனை யாவவெலாம்
சீராகமனமறிந்து தேறுவதுமெக்காலம் ௩௪

தத்வமசியென்னு மகாவாக்கிய உண்மையெலாம்
புத்தியுடன்மனமறிய புகுவதுதானெக்காலம் ௩௫

ஆசாபாசங்களத்தனையுந் துயரென்றே
நேசமதாய்த்துறக்கமன நிச்சயிப்பதெக்காலம் ௩௬

மண்ணாசை பெண்ணாசை பொன்னாசை பொல்லாதென்
றெண்ணியவையெல்லாம் விட்டொழிப்பதெக்காலம் ௩௭

போகமெலாம் அற்பமெனப் புத்தியிலேகண்டுகொண்டு
சோகமறத்துறந்து மனஞ்சுகமடைவதெக்காலம் ௩௮

துறவினதுமார்க்கத் துறைகளெலாநன்கறிந்து
துறவுபூண்டரியமனந் தவமுடிப்பதெக்காலம் ௩௯

குருமார்க்க வகையினைத்தின் பெருமையெலா நன்குணர்ந்து
குருவையடையமனம் கோருவதுமெக்காலம் ௪௰

தீட்சைகளின் மார்க்கமெலாஞ் சிறப்புடனே நன்கறிந்து
தீட்சைபெற்று நல்லமனந்தேர்வதினியெக்காலம் ௪௧

உபதேச வுண்மையெலாம் உரிமையுடனன்குணர்ந்து
உபதேசம்பெற்று மனமுயர்வடைவ தெக்காலம் ௪௨

அத்துவாசுத்தியத னருமைகளனைத்தினையும்
சுத்தமுடன்றேர்ந்து மனஞ்சுகம் பெறுவதெக்காலம் ௪௩

கலாசோதனையைந்தின் காரணவகையதனை
நலமுடனேயறியமன நாடுவதுமெக்காலம் ௪௪

பிரணவமந்திரத்தைப் பிரியமுடனுச்சரிக்கும்
தருணத்தைப்பெற்று மனமகிழ்வதினியெக்காலம் ௪௫

ஓமென்னும்பிரணவ முதித்தவகையதனை
நேமமுடன் மனமறிய நிச்சயிப்பதெக்காலம் ௪௬

அகார உகார மகாரமெனு மக்கரங்கள்
மகாப்பிரணவமென மனமறிவதெக்காலம் ௪௭

ஓங்காரப்பிரணவத்துள் ளுண்மைப்பொருளெல்லாம்
பாங்குடனேயறியமனம் பற்றுவதுமெக்காலம் ௪௮

எட்டிரண்டுங்கூடி யிலிங்கவடிவானவகை
திட்டமுடனறியமனஞ் சேர்வதினியெக்காலம் ௪௯

எட்டுமிரண்டுமொரு பத்தான அவ்வகையின்
இட்டாந்தங்கொண்டுமனந் தேர்வதினியெக்காலம் ௫௰

அஞ்சுமூன் றுமெட்டதாயனுதியான மந்திரம்
நெஞ்சிலேநினைந்துகொள்ள நேர்மைகொள்வதெக்காலம் ௫௧

ஓம்நமோ நாராயணாயவெனு மந்திரத்தை
பாங்குடனே பெறுவதற்கு பண்புகொள்வதெக்காலம் ௫௨

அஞ்ஞானம் நீக்கற்கரிய தொருமந்திரமாம்
பஞ்சாக்கரத்தை மனமுச்சரிப்பதெக்காலம் ௫௩

ஐந்துதொழில்புரியப் பஞ்சாக்கரமமைந்த
விந்தைதனையறிய மனமேவுவதுமெக்காலம் ௫௪

நமசிவயமெனுமெழுத்து நாதனுருவாயமைந்த
விமரிசையைக்கண்டுமனம் வியப்பதினியெக்காலம் ௫௫

நமசிவயமென்னுந் தூலபஞ்சாக்கரம்
உண்மையுடனுருவேத்தித் திண்மைபெறலெக்காலம் ௫௬

சிவயநமவென்னுஞ் சூக்குமபஞ்சாக்கரம்
உவமையுடனேற்றி மனந்தவமுடிப்பதெக்காலம் ௫௭

சிவயவசியென்னுங் காரணபஞ்சாக்கரம்
உவப்புடனேற்றிமன முத்தியடைவதெக்காலம் ௫௮

வாசிவாவென்னு மகாகாரணஞ்செபித்து
வாசிவசமுடனே மனமகிழ்வதெக்காலம் ௫௯

பதியட்சரமதனை பதிவாக வுள்ளடக்கி
பதியின்சிறப்பைமன மறிவதினியெக்காலம் ௬௰

அருளிறைபதிமலர் திரோதாயெனுமதன்
பெருமைதனையறிய மனம்பேணுவதுமெக்காலம் ௬௧

பஞ்சாக்கரமதனில் தத்துவமடங்குமுறை
நெஞ்சார மனமறிய நினைவதினியெக்காலம் ௬௨

இந்தவிரிவெல்லாம் உண்மைப்பொருளிலே
சொந்தமாயறியமனந் துணிவதுதானெக்காலம் ௬௩

ஒருமொழியென்னுமுபதேசமந்திரத்தை
குருமுகமாய் மனமறிந்து கொள்வதினியெக்காலம் ௬௪

ஒருமொழியுபதேச வுண்மையனைத்தையும்
அருமையுடன் மனமறிய அடிமைசெய்வதெக்காலம் ௬௫

ஒருமொழி சும்மா யிருவெனும்உண்மையை
பொறுமையுடனறிந்துமன மவுனமுறலெக்காலம் ௬௬

சும்மாயிருக்கச் சுகமுதிக்குமென்றுரைக்கும்
சன்மார்க்கநெறியை மனஞ்சார்வதுதானெக்காலம் சுஎ

எதுக்குஞ்சும்மாயிருவென்பதனையுணர்ந்து
வாதுகளாடாதுமன மடங்குவதுமெக்காலம் சுஅ

ஒருமொழியைக்கொண்டு சரியையாதிகளொழித்து
பெருமையுடன் தன்னிலையில் நிற்பதுதானெக்காலம் சுகூ

ஞானநிட்டைக்குரிய நற்சாதனம்புரிந்து
ஆனந்தக்களிப்புடனே அடங்குவதுமெக்காலம் எ௰

நாலுவேதவாக்கிய சிரவணமனனமெலாம்
சாலவேமனமறியச் சார்வதுதானெக்காலம் எக

பிரஞ்ஞானம் ப்ரமமெனும் ருக்குவேதவாக்கியத்தை
பிரக்கினையே பிரமமென மனமறிவதெக்காலம் எஉ

அகம்பிரமாஸ்மியெனும் யசுர்வேதவாக்கியத்தை
அகமேபிரமமென அறிவதுவுமெக்காலம் எங

தத்வமசியென்னுஞ் சாமவேதப்பொருளை
தத்தது நீயாவையென மனமறிவதெக்காலம் எச

அயம் ஆத்மா பிரமமெனு மதர்வணத்தின் வாக்கியத்தை
அயம்நான் பிரமமென அறிவதுவுமெக்காலம் எரு

செகமுதித்த வகையெல்லாஞ் சிறப்பாகவேயறிந்து
அகமுகத்திற்கண்கொண்டு ஆனந்திப்பதெக்காலம் எசு

சத்திமாயை முக்குணத்தின் விரிவுதனையெல்லாம்
வித்தகமாயறிய மனம்விரும்புவதுமெக்காலம் எஎ

இந்தவகையெல்லாம் உண்மைப்பொருளிலே
சந்தேகமறமனங் கண்டுகொள்வதெக்காலம் எஅ

தத்துவஞானம் பெரிதென்றும் தத்துவாதீ தன்பதியென்றும்
முத்தருரைமனமறிய முயலுவதுமெக்காலம் எகூ

தன்னையறியத் தனக்கொரு கேடில்லையெனு
நன்மொழியைக்கண்டுமன நலம்பெறுவதெக்காலம் அ௰

தன்னைமறைத்தது தனுகரணங்களெனும்
நன்மொழியை யறியமன நாடுவதுமெக்காலம் அக

பரத்தைமறைத்தது பார்முதற்பூதமென்னு
உறத்தமொழியதனை மனமறிவதெக்காலம் அஉ

தத்துவதோற்ற வொடுக்கமனைத்தையும்
புத்தியுடனறியமனம் புகுவதினி யெக்காலம் அங

தத்துவந்தோன்றின் முறையே யொடுங்குமெனும்
சித்திரத்தை யறிந்துமனஞ் சீர்பெறுவதெக்காலம் அச

வேதாந்த தத்துவமிருபத்தினாலு சித்தாந்ததத்துவ முப்பத்தாறு
நீதமுடனிரண்டின்வகை மனமறிவதெக்காலம் அரு

பிரகிருதி மாயைதனிலுதித்த தத்துவமிருபத்துநால்
அரியவேதாந்தத்துரிமையென மனமறிவதெக்காலம் அசா

தேகமுதித்த வகைதனையெல்லாம்
மோகமுடனறியமன முயலுவதுமெக்காலம் அஎ

உடலினும் வேறாமுயிரெனும் ஆன்மாவாம்
சடமெனுந்தேகமதன் கூறறிவதெக்காலம் அஅ

ஆத்மதத்துவமிருபத்தினாலான்மாயிருபத்தைந்தாம்
சாத்யமுடனறியமனஞ் சார்வதுதானெக்காலம் அகூ

சுத்தமாதி சுத்தமைந்துகால மாதிஅசுத்தமேழ்
தத்துவமீராறின்வகை மனமறிவதெக்காலம் கூய

சுத்தவசுத்தமொடு பிரகிருதி தத்துவஞ்சேர்ந்து
சித்தாந்தத்துரிமையென மனமறிவதெக்காலம் கூக

மாயையிலுதித்த சத்வ ரச தமசென்னும்
ஆயமுக்குணபேத மறிவதுவுமெக்காலம் கூஉ

முக்குணத்தின்றோற்றமே புத்திசித்தமானதெனும்
பக்குவத்தையறியமனம் பண்புகொள்வதெக்காலம் கூந

புத்தியிற்பூத்த தைசத வைகரி பூதாதி
பெத்த ஆங்காரமூன்றை மனமறிவதெக்காலம் கூச

தைசதசத்துவத்திற் சோத்திராதி யிந்திரியமனம்
பையவேதோன்றினதை மனமறிவதெக்காலம் கூரு

வைகரிரசோகுணத்தில் வாக்காதி வசனாதி
மெய்யாகத்தோன்றினதை மனமறிவதெக்காலம் கூசா

பௌதீகதமோண்ணத்தில் சத்தாதி மண்ணாதி
பதிவாகத்தோகுறினதை மனமறிவதெக்காலம் கூஎ

மனம்புத்திசித்த ஆங்கார அந்தக்கரண
இனம் நான்கின் விரிவுதனை மனமறிவதெக்காலம் கூஅ

மற்றவிரிவுதத்துவங்களுண்மைப்பொருளிலே
வித்தாரமறியமனம் விரும்புவதுமெக்காலம் கூகூ

மண்ணாதிபூதமைந்தும் தூலதேக தத்துவமாய்
வண்மையுடன்நின்றதனை மனமறிவதுதானெக்காலம் ௱

தூலசூக்குமகாரண மகாகாரணமென்னும்
நாலுதேகவகையினைத்து மனமறிவதினியெக்காலம் ௱௧

தூலாதிதேகமெலாஞ் சடப்பொருளேயென்றறிந்து
மேலாம்பொருளறியமனமிச்சைவைப்பதெக்காலம் ௱௨

என்தேகமென்னிந்திரிய மென்பிராணனென்றறியும்
நுண்ணறிவேதானென்று உணர்வதுவுமெக்காலம் ௱௩

தன்னையறிய தத்துவங்கணியதிசெய்ய
வின்னவிதமென்று மனமறிவதுவுமெக்காலம் ௱௪

தத்துவமொவ்வொன்றைப் பற்றியதன்கூறறிந்து
தத்துவந்தனக்கன்னியமென்று மனமறிவதெக்காலம் ௱௫

தன்னறிவாற்காணுந்தகமை யல்லன் ஈசனெனும்
நன்மொழியை மனமறிந்து நலம்பெறுவதெக்காலம் ௱௬

தத்துவமொவ்வொன்றுந் தானல்லவென்றுணர்ந்து
சுத்தஅறிவே ஆத்மமென்று அறிவதுதானெக்காலம் ௱௭

ஆன்மரூபதரிசனஞ் சுத்தியவையனைத்தும்
பான்மையுடனறிய மனம்பற்றுவதுமெக்காலம் ௱௮

ஆன்மாபஞ்சகோசத்துக் கன்னியனெனும்
பான்மையறியமனம் பற்றுவதுமெக்காலம் ௱௯

கோசமாமைந்தின்குண மனைத்தினுண்மைதனை
நேசமுடனறியமன நிற்பதுதானெக்காலம் ௱௰

ஆத்மவிலக்கணமத்தனையுநன்கறிந்து
ஆத்மாநித்தியனென மனமறிவதெக்காலம் ௧௧௧

இந்தவிரிவெல்லாம் உண்மைப் பொருளிலே
சொந்தமாயறியமனந் தொடங்குவதுமெக்காலம் ௧௧௨

ஆத்மாபொருந்து மவத்தைகளைந்தினையும்
நீத்தமுடனறியமன நிலைநிற்பதெக்காலம் ௧௧௩

தூலாதிதேகமே சாக்கிராதியவத்தையெனும்
மூலமெலாமறிய மனமுயலுவதுமெக்காலம் ௧௧௪

சாக்கிரசொப்பனசுழுத்தி துரியதுரியாதீதம்
தாக்குமிடந்தத்துவத்தைத் தானறிவதெக்காலம் ௧௧௫

சாக்கிரத்தான நெற்றி பொருந்துதத்துவ முப்பத்தைந்தின்
போக்குகளறியமனம் புகுவதுதானெக்காலம் ௧௧௬

சொப்பனத்தானகண்டம் பொருந்துதத்துவ மிருபத்தைந்தை
செப்பமுடனறிந்துமனந் தேறுவது மெக்காலம் ௧௧௭

சுழுத்திக்கிடமிதயம் பொருந்துதத்துவ மூன்றும்
வொழுக்கமதை மனமறிய வுவப்பதுவுமெக்காலம் ௧௧௮

துரியத்துக் கிடம்நாபி பொருந்து தத்துவ மிரண்டாம்
அருமையையறிந்துமனம் பெருமையுற லெக்காலம் ௧௧௯

துரியாதீதத்திற்கு சரீரமேயில்லையெனு
துரியாதீதப்பெருமை தோன்றுவதுமெக்காலம் ௧௨௰

சாக்கிராதிதத்துவத்தை உண்மைப் பொருளிலே
நீக்கமறமனமறிந்து நிற்பதுவுமெக்காலம் ௧௨௧

சுத்தாவத்தையெனும் நின்மலசாக்கிராதி யைந்தின்
வித்தாரமறிய மனமேவுவது மெக்காலம் ௧௨௨

கேவலசகலசுத்த அவத்தைதனையறிந்து
சீவன்முத்தனாகி சிறப்படைவ தெக்காலம் ௧௨௩

நிட்டையாதியோகமெலாம் உண்மைப்பொருளிலே
திட்டமுடன் கண்டுமனந் தேறுவது மெக்காலம் ௧௨௪

சாதகசாத்திய ரிலக்கணமனைத்தும்
நீதமாயறிந்துதன் னிலையிலிருப்ப தெக்காலம் ௧௨௫

இந்தவகையனைத்தும் உண்மைப்பொருளிலே
அந்தமதாயறிந்து ஆனந்திப்பதெக்காலம் ௧௨௬

ஞானபூமிகளேழின் விரிவுதனையெல்லாம்
ஆனஉண்மைப்பொருளிலே அறிந்துகொள்வதெக்காலம் ௧௨௭

சப்தாவத்தைகளுந் தசமன் திட்டாந்தமும்
ஒப்பஉண்மைப்பொருளதனி லறிந்துகொள்வதெக்காலம் ௧௨௮

ஞாதுருஞானஞேயமெனு மூன்றினுண்மை
நீதமாயறிந்து தன்நிலையில்நிற்பதெக்காலம் ௧௨௯

ஆனந்தவகையனைத்தும் உண்மைப்பொருளிலே
ஆனந்தமாயறியமனம் அன்புகொள்வதெக்காலம் ௧௩௰

முன்னிலைச்சுட்டுகளனைத்தையுமொழித்து
தன்னிலையேசதமென்று சாதிப்பதெக்காலம் ௧௩௧

# புலம்பல்.

காயத்தைச்சதமென்னுங் கசடருறவாடாது
ஞேயமாய்த் தன்னிலையில் நிற்பதுவுமெக்காலம் க௩௨

காற்றிற்பொதிந்த நிலையற்றகாயத்தை
ஏற்றுத்திரியாம லிருப்பதுதானெக்காலம் க௩௩

உடல்பொய்யுறவென்னும் உண்மையுறவென்னும்
திடமானமொழியதனைத் திறங்கொள்வதெக்காலம் க௩௪

ஊருஞ்சதமல்ல வுற்றார்சதமல்ல
யாருஞ்சதமல்ல வென்றிருப்பதெக்காலம் க௩௫

வீடுமுதலுறவெல்லாம் சதமென்னும் வீணருடன்
கூடாமற்கூடிக் குலவுவதுமெக்காலம் க௩௬

சிந்தனையற்றுச் சினமற்றுப்பிரியமற்று
பந்தங்களற்றுமனம் பண்புறுவதெக்காலம் க௩௭

மாறிநின்றறிவை மயக்கும்புலன்கடமை
வேறெனவேகண்டுமன மேன்மையுறலெக்காலம் க௩௮

ஆங்காரத்தால்வளரும் ஐம்புலனைச்சுட்டறுத்து
தூங்காமற்றூங்கிச் சுகம்பெறுவதெக்காலம் க௩௯

யான்யெனதென்னு மபிமானந்தனைவிட்டு
தானவனாய்நிற்கு நிலைசாதிப்பதெக்காலம் க௪௰

நானென்னும் நீயென்னு முறையதனைநாடாமல்
தானவனாய்நின்றுநிலை சாதிப்பதெக்காலம் க௪க

அவனன்றியோரணுவு மசையாதெனுமொழியைக்
கவனத்தில்வைத்து மனங்களிப்பதுவுமெக்காலம் க௪௨

எல்லாமவன்செயலென் றெண்ணியிறுமாந்துமிகப்
பொல்லாதவைநீக்கிப் பொலிவுறுவதெக்காலம் க௪௩

மனமென்னுமாய்கை யுதித்தவகையறிந்து
மனமொழிந்து தன்னிலையில் மகிழ்வதினியெக்காலம் க௪௪

அறிவாவதேதுசில அறியாமையேதெனும்
பெருமொழிதனையறிந்து பேறடைவதெக்காலம் க௪௫

என்னுணை என்னுணை ஏகமிரண்டென்னுமல்
முன்னோர்கூறியதை யுறுதிகொள்வதெக்காலம் க௪௬

முத்திமுத்தரிலக்கணத்தை யுண்மைப்பொருளிலே
சித்தமுடனேயறிய சிந்தை கொள்வதெக்காலம் கசஎ

சமாதிவகையெல்லாம் உண்மைப்பொருளிலே
விமரிசையுடனேயறிய வின்பங்கொள்வதெக்காலம் கசஅ

தொம்தத்தசி அதி நிச பதமைந்தை
செம்மையாயறிவதற்குச் சிந்தைகொள்வதெக்காலம் கசகூ

இந்தவகையெல்லாம் உண்மைப்பொருளிலே
அந்தமுடனறிந்துகொள்ள ஆசைவைப்பதெக்காலம் கருய

தத்பத தொம்பத அசிபதஅருமையெலாம்
வித்தகமாய்மனமறிய மேவுவதுமெக்காலம் கருக

சுத்தமானதொம்பதமே தத்பதத்துக்குடலென்னும்
வித்தகத்தைநன்குணர்ந்து வியப்பதுவுமெக்காலம் கருஉ

அதுவென்னுந்தத்பதத்தின் உபாதியவத்தைதனை
மதியுடனேயறிந்து மகிழ்வதினியெக்காலம் கருங

காரியவுபாதிகாரண அவத்தைகளின்
சாரணங்களறிந்து மனங்களிப்பதுவுமெக்காலம் கருச

பதமூன்றின் சோதனை சிரவண மனநதி
யிதமுடனேயறிய விச்சைகொள்வதெக்காலம் கருரு

உபாதிகணீங்கினதே சுத்தமெனுமுண்மைதனைச்
சுபாவமுடனேயறிந்து சுகமடைவதெக்காலம் கருசா

அகண்டவாக்கியமென்னுமசிபதமனனத்தால்
அகண்டபரிபூரணமாய் விளங்கிநிற்பதெக்காலம் கருஎ

இந்தவகைவிரிவனைத்தும் உண்மைப்பொருளிலே
சொந்தமுடனேயறிந்து சுகமடைவதெக்காலம் கருஅ

முற்றுப்பெற்றது.

# விளம்பரம்.

வேதம், வேதாகமம், வேதாந்தம், சித்தாந்தம், சித்தர்ஞானம், அத்வைதம், அத்வைத சுத்தவேதாந்த மார்க்கங்களி நிலைமைகளும், சைவம், வீரசைவம், வைஷ்ணவ முதலிய சமயங்களின் கோட்பாடுகளும், பக்தி, யோக, ஞான, நிட்டைகளனுட்டிப்புகளும், சித்தி முக்திக்குரிய வாய்மைகளும், அரிய விஷயங்களும், பொருளுண்மைகளும், ஓர் முகமாக வசன ரூபமாய் மேற்கோள்களுடன் விளங்கும் "உண்மைப்பொருள் விளக்க" மென்னு நூலும் அதற்கனுசரணையாய் இயற்றிய "எக்காலக்கண்ணி" யென்னும் இந்நூலும் அடியிற்கண்டவர்களிடம் விலைக்குப்பெற்றுக்கொள்ளலாம்.

| | | | |
|---|---|---|---|
| உண்மைப்பொருள் விளக்கம் | (Stiff bound) | விலை ரூ. | 1-0. |
| ,, | (Calico bound) | ,, | 1-2. |
| எக்காலக்கண்ணி | ... ... | விலை அணா | 1. |

ஒவ்வொன்றிலும் 12 புத்தகம் ஒருமிக்க வாங்குகிறவர்களுக்கு இரண்டு புத்தகம் இனாமாக கொடுக்கப்படும். விலை கொடுத்து நூல்கள் பெற சக்தியற்ற ஞானமார்க்கத்திற் சிரத்தையுள்ளவர்கள் இதற்கடியிற் கையொப்பமிட்ட நூலாசிரியரிடம் விலையின்றி இனாமாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

தபாலில் பெற்றுக்கொள்ள விரும்புகிறவர்களுக்கு ஊர், பேர் முதலியவைகள் தெரிவித்தால் வி. பி., புக்கு போஸ்ட்டு மூலமாய் அனுப்பப்படும்.

## நூல்கள் பெறவேண்டிய இடம்.

ம-ா-ா-ஸ்ரீ செ. நாராயணசாமி முதலியார்,
107, பைகிராப்ட்ஸ் ரோட்டு, புதுப்பாக்கம், சென்னை.

ம-ா-ா-ஸ்ரீ சி. கோ. தெய்வசிகாமணி முதலியார்,
கிளார்க், ரெவினியு போர்டாபீசு, சென்னை.

ம-ா-ா-ஸ்ரீ மு. கருப்பண பிள்ளை,
புக் ஷாப்பு, புதுமண்டபம், மதுரை.

ம-ா-ா-ஸ்ரீ சிவசங்கர முதலியார், } பெரியமணியக்கார
வெ. நாராயணசாமி பிள்ளை, } வீதி, செங்கற்பட்டு.

ம-ா-ா-ஸ்ரீ வெ. க. சிங்காரவேலு முதலியார்,
கிளார்க், கலெக்டர் ஆபீசு, சித்தூர்.

செ. நாராயணசாமி முதலியார்,
உண்மைப்பொருள்விளக்க நூலாசிரியர்.

MAHAMAHO DR. U. V. SWAMINATHA IYER LIBRARY TIRUVANMIYUR :: MADRAS-41
MAHAMAHO DR. U. V. SWAMINATHA IYER LIBRARY TIRUVANMIYUR :: MADRAS-41